குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.72/2020

அ.சா.3

2025–ம் ஆண்டு நவம்பர் 25–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அல்லிமுத்து | தொழில் | |
| தந்தை பெயர் | அய்யனார் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.29 மணி,

Accused Govindhan present. Advocate Mr.Sabarinathan present for Advocate Mr.Thiyagarajan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் சட்டூரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 4 – 5 வருடங்களுக்கு முன்பு, மாலை 04.30 – 05.00 மணியளவில் நான் வெளியில் சென்றுவிட்டு, வீட்டிற்கு செல்வதற்காக, சிக்கனம்பட்டி தாராபுரம் செல்லும் சாலை பிரிவு அருகே வந்தபோது, ஒரு இருசக்கர வாகனம் சேலம் பக்கமிருந்து தருமபுரி நோக்கி வந்தது. அதில், இரண்டு நபர்கள் இருந்தார்கள்.

2. அப்போது தருமபுரி பக்கமிருந்து சேலம் நோக்கி பள்ளி பேருந்து ஒன்று வந்தது. இரண்டு வாகனங்களும் மோதி விபத்து நடந்தது. எந்த வாகனம் மோதி விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களுக்கும், காயம் ஏற்பட்டது. தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அவர்கள் இருவரையும் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம்.

3. இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் பள்ளிபேருந்தின் பதிவெண் எனக்கு தெரியாது. பேருந்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.25 17:50:48 +0530

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 20.09.2019 ஆம் தேதி மாலை சுமார் 16.50 மணியளவில் சேலம் – தருமபுரி சாலையில் குப்பூர் பேருந்து நிறுத்தம் தாராபுரம் பிரிவு சாலை அருகே பிரகாஷ் என்பவர் டி.என்.30 பி.சி.7935 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை பின்னால் ரிஸ்வான் என்பவரை அமர வைத்துக்கொண்டு, ஓமலூர் – தீவட்டிப்பட்டி நோக்கி சென்றபோது, அதே சாலையில் தருமபுரி பக்கமிருந்து சேலம் நோக்கி ஆஜர் எதிரி டி.என்.28 எச்.6682 என்ற பதிவெண் கொண்ட மாதர்ஸ் வித்யாலாயா பள்ளிக்கு சொந்தமான மகேந்திரா பள்ளி வாகனத்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, எந்த விதமான சிக்னலும், சைகையும் செய்யாமல், தாராபுரம் சாலைக்கு செல்வதற்காக திடீரென பேருந்தினை வலதுபுறமாக திருப்பி, பிரகாஷ் மற்றும் ரிஸ்வான் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.38 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.25 17:50:52 +0530